Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC . No. 2/2022
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS –9

| | | | |
|---|---|---|---|
| Name: | தங்கராஜன் | Calling: | உதவி ஆய்வாளர், ஓய்வு |
| Husband's/ Father's Name: | தாதக்குட்டி | Religion: | |
| Village: | தெக்குப்பட்டு | Age: | 62 |
| Taluk: | நாட்றம்பள்ளி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 17.04.2026 நேரம் : 12.15 PM

( எதிரி ஆஜர்.)

அ.சா. 9 முதன்மை விசாரணை

நான் திருப்பத்தூர் சாலை போக்குவரத்து பிரிவு 3 ல் கடந்த 30.06.2024 ம் தேதி உதவி ஆய்வாளராக இருந்து பணி ஓய்வு பெற்றேன்.

கடந்த 13.09.2021 ம் தேதி வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இன்டிமேசனை பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த திருமதி. மலர் என்பரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த வாக்குமூலம் ஏற்கனவே அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.பின்பு நிலையம் சேரந்து அதன்தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 537/2021 சட்டப்பிரிவுகள் 448,294(பி),323,324,506(1) இதச உ/இ 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** புகார் மனுவின்

அசலை முதல் தகவல் அறிக்கையுடன் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டேன்.

பின்னர் நானே வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு சம்பவயிடம் சென்று அன்றே, பகல் 14.00 மணிக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் அரவிந்த், மோனிஷ் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.த.சா.ஆ 8 மற்றும் அ.த.சா.ஆ 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் அதே நாள் பகல் 14.30 மணிக்கு சம்பவத்தில் எதிரி சுஜய்குமார், சாட்சிகள் மலர், அருண்குமார் ஆகியோரை அடிக்க பயன்படுத்திய தடி ஒன்றை மகசரில் கைப்பற்றினேன். **கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த தடி சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சா.பொ.1 ஐ படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டேன். அந்த வழக்கு சொத்து எண்.250/2021 என்ற எண் பெற்றுக்கொண்டேன். **படிவம் 91 அ.த.சா.ஆ 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் சாட்சிகள் முருகன், மஞ்சுநாதன், ரமேஷ், அரவிந்த், மோனிஷ் ஆகியவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த பிற சாட்சிகள் திருமதி. மலர், அவரது மகன் திரு.அருண்குமார் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி சுஜய்குமாரை தேடிவந்த நிலையில் 15.09.2021 ம் தேதி கொத்தக்கோட்டை பஸ் ஸ்டாப்பிடம் காலை 07.00 மணிக்கு முறைப்படி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்திதேன். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. செந்தில் குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ்கள் பெற்றேன். அந்த காயச்சான்று ஏற்கனவே அ.த.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் காயம்பட்ட மலர் மற்றும் அருண்குமார் ஆகியோருக்கு கொடுங்காயம் என சான்று வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 448,294(பி),323,324,506(1) இதச உ/இ 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் என்பதில் இருந்து 448,294(பி),324,325,326,506(2) இதச உ/இ 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் ஆக பிரிவு மாறுதல் செய்து

பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது குற்றம் உண்மையென தெரியவந்ததால் எதிரி மீது 448,294(பி),324,325,326,506(2) இதச உ/இ 4 பெண்கள் வன்கொடுமை தடுப்புச்சட்டம் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் அனைவரும் குவிமுச பிரிவு 161(3) ன் படி வாக்குமூலத்தில் உள்ளதை போல் தான் சொன்னார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

அ.சா.1 எதிரியின் தங்கையின் மாமியார் என்றால் சரிதான். அ.சா.5 அருண்குமார் எதிரியின் தங்கையின் கணவர் என்றால் சரிதான். எதிரியின் தங்கை தேன்மொழிக்கும் அவரது தங்கையின் கணவர் அருண்குமாருக்கும் தகராறு இருந்து பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். சம்பவமானது இரவு 01.00 மணிக்கு நடந்ததாக அ.சா.1 கூறியுள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.1 புகார்மனுவில் இரவு 10.45 மணிக்கு எதிரி கதவை உடைத்து அ.சா.1 யை வெளியில் இழுத்து வந்து இடது மேல்கை, நடுமுதுகு , வாய் ஆகிய இடங்களில் அடித்தார் என சொல்லியுள்ளாரா என்றால் வாய்மீது மட்டும் அடித்ததாக சொல்லியுள்ளார். எதிரி கத்தியை காட்டி ஊரையே மிரட்டி வந்தார் என அ.சா.1 கூறியுள்ளார் என்றால் சரியல்ல. அரசு மருத்துவமனையில் இருந்து வந்த இன்டிமேசனை புகாருடன் இணைத்து அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி அ.சா.1 ன் வீட்டின் இடம் வரும் போது பேரனும் தானும் மட்டும் இருந்ததாக சொல்லியுள்ளாரா என்றால் அருண்குமாரும் இருந்தாக சொல்லியுள்ளார். எதிரி வாய் மீது அடித்ததால் அ.சா.1 ன் முன்பல் விழுந்துவிட்டது புகாரிலும் விசாரணையிலும் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. சம்பவம் இரவு 01.00 மணிக்கு நடந்ததாகவும் அப்போதே சம்பவயிடம் சென்று நான் கையொப்பம் வாங்கிக்கொண்டேன் என்றால் சரியல்ல. அ.சா.1க்கு வாய்மீது இருந்த காயத்தை தவிர வேறு எதுவும் இல்லை என்றால் உள்காயம் இருந்தது. அ.சா5 அருண்குமார் என் அம்மாவை கட்டையால் அடித்ததால் என் அம்மாவின் இருப்பற்கள் விழுந்துவிட்டதாக வாக்குமூலத்தில் கூறியுள்ளாரா என்றால் இல்லை. சம்பவயிடத்தில் கைப்பற்றிய தடியை யார் அடையாளம் காட்டியது என்றால் அடையாளம் யாரும் காட்டவில்லை. அ.சா.1 மற்றும் 5 இடம் இந்த தடியால் தான் எதிரி அடித்தாரா என கேட்டேனா என்றால் இல்லை. மருத்துவர் செந்தில் குமார் வாக்குமூலத்தில் கொடுங்காயத்திற்கான

காரணத்தை கூறியுள்ளாரா என்றால் இல்லை. பார்வை மகசர் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களை அன்றே நீதிமன்றத்தில் அனுப்பி விட்டேனா என்றால் அனுப்பிவிட்டேன். அ.சா.5 அருண்குமார் முகநூலில் எதிரியின் தங்கையைப்பற்றி தவறாக பதிவிட்டதை கேட்டதால் தான் எதிரியின் மீது தவறான வழக்கை போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) தங்கராஜன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.04.17 16:02:33 +0530